# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 138/மா/2022**

**நாள் : 28.9.2022**

திரு. G. தேவா,
வடபழனி, சென்னை. – முறையீட்டு மனுதாரர்

1. செயற்பொறியாளர்,
2. உதவி செயற்பொறியாளர்,
3. உதவி நிர்வாக பொறியாளர்,

மண்டலம் - 10,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் 25.08.2022 நாளிட்ட மனு 27.08.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 138/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் முறையீட்டு மனுவில்,

"பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு -130, பகுதி – 29, மண்டலம் - 10, கதவு எண்.21, மேற்கு சிவன் கோயில் தெரு, ஒட்டகபாளையம், சோமசுந்தர பாரதிநகர், வடபழனி, சென்னை – 600 026, (பழைய KMG கல்யாண மண்டபம்) என்கின்ற முகவரியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகலின்படி அடுக்குமாடி வீடு கட்டாமல், விதிமுறைக்கு மீறி தரைதளத்தில் மினி ஹால், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களில் குடியிருப்பு கட்டிடம் கட்டி வருகிறார்கள்.

இது சம்மந்தமாக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் 28.05.2022 அன்று எனது சகோதரர் K. வேலு விண்ணப்பித்தார் அதற்கு தகவல் வழங்கவில்லை, பின்பு 05.07.2022 அன்று முதல் மேல்முறையீட்டு விண்ணப்பம் அனுப்பினோம். அதற்கும் தகவல் வழங்காததால், இரண்டாம் மேல்முறையீட்டு விண்ணப்பம் 08.08.2022 அன்று விண்ணப்பித்தோம். இறுதியாக 18.08.2022

தேதியிட்ட கடிதத்தில் தகவல் அனுப்பினார்கள் 24.08.2022 அன்று எங்களுக்கு கடிதம் டெலிவரி செய்யப்பட்டது.

மேற்கண்ட கட்டிடம் 3 மாதத்திற்கு முன்பு போட்டோ எடுக்கும் போது பாதி கட்டிய நிலையில் இருந்தது. அப்போதே நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று அந்த கட்டிடம் விதிமுறை மீறி கட்டி முடிக்கும் நிலை வரை வந்திருக்காது. மேற்கண்ட கட்டிடத்திற்கு Completion Certificate வழங்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால், மின் இணைப்பு, மின் மீட்டர் பொறுத்திவிட்டார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் செ.வெ.எண்.97, நாள்:21.04.2022படி கட்டிடம் கட்டுவதை மேற்கண்ட மண்டலம்-10ன் செயற்பொறியாளர் வ.பெரியசாமி, 1.Unit 29ன் உதவி செயற்பொறியாளர் G. கோவிந்தசாமி மற்றும் 130வது வார்டு உதவி நிர்வாக பொறியாளர் சங்கர் ஆகியோர் பின்பற்றவில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி செ.வெ.எண்.245 நாள்:21.08.2022ன் படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி பெறுபவர்கள் கட்டிட மற்றும் திட்ட அனுமதியில் குறிப்பிட்டுள்ளவாறு அளவு மற்றும் விவரக்குறிப்பின் அடிப்படையில் தான் கட்டடங்களை கட்ட வேண்டும் அனுமதியில் குறிப்பிடப்படாத, விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் கண்டறியப்பட்டு கட்டட உரிமையாளர்களுக்கு குறிப்பாணை வழங்கப்படும். மேலும், தகுந்த விவரங்கள் மற்றும் போதிய ஆவணங்கள் இல்லாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட கட்டடத்தை மூடி சீல் வைக்க குறிப்பாணை வழங்கப்பட்டு, குறிப்பிடப்பட்ட காலக்கெடுவிற்கு பிறகு மாநகராட்சி அலுவலர்களால் மூடி சீல் வைக்கப்படும் என்று உள்ளது. ஆனால், 12.07.2022 அன்று பெயருக்கு Notice Calling for Approved Plan என்று தாக்கீது கொடுத்துவிட்டு தன் கடமை முடிந்ததாக Unit 29 உதவி செயற்பொறியாளர் G. கோவிந்தசாமி மற்றும் 130வது வார்டு உதவி நிர்வாக பொறியாளர் சங்கர் உள்ளனர். Stop Work Notice அல்லது Lock and Seal கொடுக்கவேண்டிய கட்டிடத்திற்கு Notice Calling for Approved Plan என்று Notice வழங்குகிறார்கள்.

ஆகவே, ஐயா அவர்கள் மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தின் உரிமையாளரிடம் நாங்கள் அனுப்பிய தகவல் பெறும் உரிமைச் சட்டம் மனுவை காண்பித்து கையூட்டு பெற்றுக்கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் செய்தி குறிப்பாணையை துச்சமென நினைத்தும் மற்றும் அனுமதியில்லாத கட்டடம் மீது நடவடிக்கை வாரம் ஒருமுறை கூட்டம் நடத்த உத்தரவு என்று உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அளித்த உத்தரவையும் மதிக்காமல் செயல்படும் மண்டலம் - 10ன் செயற்பொறியாளர் வ.பெரியசாமி I, Unit 29–ன் உதவி செயற்பொறியாளர் G. கோவிந்தசாமி மற்றும் 130வது வார்டு உதவி நிர்வாக பொறியாளர் சங்கர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

**2) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 13.09.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

**முறையீட்டு மனுதாரர் 13.09.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ல் உள்ள கதவு எண் 21, மேற்கு சிவன் கோயில் தெரு, ஒட்டகபாளையம், சோமசுந்தர பாரதி நகர், வடபழனி, சென்னை என்கின்ற முகவரியில் மாநகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகலின்படி அடுக்குமாடி கட்டாமல், விதிமுறைகளை மீறி கட்டடம் கட்டி வருகின்றனர். மேற்கண்ட கட்டடத்தின் முதல் தளத்தில் மினி ஹால், மற்றும் 1 முதல் 3ம் தளங்களில் குடியிருப்பு கட்டடம் கட்டி வருகிறார்கள். இது தொடர்பாக மாநகராட்சிக்கு

புகார் மனுக்கள் அனுப்பியும், மண்டலம் 10ல் பணிபுரிந்து வரும் செயற்பொறியாளர் திரு. பெரியசாமி, உதவி செயற்பொறியாளர் திரு. ஜி. கோவிந்தசாமி மற்றும் உதவிப் பொறியாளர் திரு. சங்கர் ஆகியோர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, விதிமுறைகளை மீறி குடியிருப்பு கட்டடம் கட்டிவரும் உரிமையாளர் மீதும், விதிமுறைகளை மீறி குடியிருப்பு கட்டடம் கட்டுவதை சரிவர கண்காணிக்கத் தவறிய மேற்கண்ட 3 அலுவலர்கள் மீதும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**13.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகிய மண்டலம் – 10ன் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகிய மூவரும் தங்களது வாக்குமூலத்தில்** :

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10 வடபழனி, ஒட்டகபாளையம், சோமசுந்தர பாரதி நகர், மேற்கு சிவன் கோயில் தெரு கதவு எண் 21 என்கின்ற முகவரியில் அடுக்கு மாடி குடியிருப்பு கட்டப்பட்டு வருகிறது. மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பிற்கு குடியிருப்பு கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆனால் வரைபடத்தின்படி கட்டடம் கட்டப்படவில்லை. எனவே, அக்கட்டடத்தின் மீதான நடவடிக்கையாக கடந்த 12.7.2022 அன்று Notice calling for approved plan, 1.8.2022 அன்று Lock & Seal and Demolition Notice மற்றும் 2.9.2022 அன்று Deoccupation Notice ஆகியவை கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து, அவற்றின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பை நேரடியாக ஆய்வு செய்தபோது மனுதாரர் குறிப்பிட்டவாறு மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பின் கீழ் தளத்தில் மினி உறால் ஏதும் இல்லை. மாறாக, அங்கு வாகன நிறுத்த இடம்தான் உள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர்களான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10-ன் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் ஆகியோர்களின் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு -130, பகுதி – 29, மண்டலம் - 10, கதவு எண்.21, மேற்கு சிவன் கோயில் தெரு, ஒட்டகபாளையம், சோமசுந்தர பாரதிநகர், வடபழனி, சென்னை – 600 026, (பழைய KMG கல்யாண மண்டபம்) என்கின்ற முகவரியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகலின்படி அடுக்குமாடி வீடு கட்டாமல், விதிமுறைகளை மீறி தரைதளத்தில் மினி ஹால், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களில் குடியிருப்பு கட்டிடம் கட்டி வந்துள்ளது தெரியவருகிறது. மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் அடுக்குமாடி குடியிருப்பிற்கு குடியிருப்பு கட்டட அனுமதி பெறப்பட்டு வரைபடத்தின்படி கட்டடம் கட்டப்படவில்லை என்பதால் சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் அக்கட்டடத்தின் மீதான நடவடிக்கையாக 12.7.2022 அன்று Notice Calling for approval Plan, 1.8.2022 அன்று Lock and Seal and Demolition Notice மற்றும் 2.9.2022 அன்று De – Occupation Notice ஆகியவை கட்டட உரிமையாளருக்கு வழங்கியுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது. மேலும் கள ஆய்வின்போது மனுதாரர் குறிப்பிட்டவாறு மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பின் கீழ் தளத்தில்

மினி ஹால் ஏதும் இல்லை எனவும் மாறாக அங்கு வாகன நிறுத்த இடம் தான் உள்ளது என்பதை மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

மாநகராட்சி அலுவலர்கள் முறையாக கள ஆய்வு மேற்கொண்டு இருந்திருந்தால் இதுபோன்ற நிகழ்வினை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தியிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் இருந்தது அதிகாரிகளின் அலட்சிய போக்கையே காட்டுகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. எனவே வரைபட அனுமதியின்படி கட்டடம் கட்டப்படுகிறதா இல்லையா என்பதை கள ஆய்வு செய்யாமல் செயல்பட்ட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட கட்டடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய தொடர்நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள மண்டலம்–10ன் மண்டல அலுவலரை–ஐ அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. G. தேவா,
   C-50, பிளாசா மேனர் பிளாட்,
   எண்.1, கருமாரி அம்மன் கோயில் தெரு,
   வடபழனி, சென்னை – 600 026.
2. செயற் பொறியாளர்,
   உதவி செயற் பொறியாளர்,
   உதவி நிர்வாகப் பொறியாளர்,
   மண்டலம்–10, சென்னை பெருநகர மாநகராட்சி,
   எண்.117, NSK சாலை, கோடம்பாக்கம்,
   சென்னை – 600 024.
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

(கையொப்பம்) 28/9/2022

செயலாளருக்காக.